தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 041 /ந/2023
நாள் 07.06.2023

திரு. P. ஆறுமுகவேலன்,
கொடைக்கானல். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி,
திண்டுக்கல் மாவட்டம். – எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், லாயிட்ஸ் ரோடு. கதவு எண் 3/131 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P. ஆறுமுகவேலன் என்பவரின் 4.02.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 6.02.2023 அன்று பெறப்பட்டு 041/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், லாயிட்ஸ் ரோடு. கதவு எண் 3/131 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P. ஆறுமுகவேலன் என்பவர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டுகளில் கொடைக்கானல் நகராட்சியின் மூலம் சுமார் 50 கோடி ரூபாய்க்குமேல் தார் சாலைகள் / சிமெண்ட் சாலைகள் அமைப்பதற்கு முறையாக தமிழ்நாடு நகராட்சிகளின் சட்ட வழிமுறைகளை பின்பற்றாமல் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளது. ஒரு சில ஒப்பந்ததாரர்களுக்கு மட்டுமே, (நகராட்சியில் உள்ள முக்கிய அதிகாரிகளுடன் நெருக்கமாக இருப்பவர்களுக்கு மட்டுமே) ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் எடுத்த ஒப்பந்ததாரர்கள் ஒர்க் ஆர்டரில் உள்ள நெறிமுறைகள் மற்றும் வழிமுறைகளை பின்பற்றி பணிகள் செய்யவில்லை. மோசமாக இருந்த பிரதான சாலைகளில் மெட்டல் முறையாக வைத்து step 1 step 2 என்று பணிகள் செய்யாமல் (கொடைக்கானலில் உள்ள எல்லா சாலைகளும் ஏற்றமும் இறக்கமுமாக இருப்பதால்) முறையான பிக்மெண்ட் தார் சேர்க்காமலும் சாலை பணிகள் செய்துள்ளார்கள். முறையாக பணிகள் செய்யப்பட்டுள்ளதா என்று ஆய்வு செய்யவேண்டிய கொடைக்கானல் நகராட்சியின் முக்கிய அதிகாரிகள் ஒப்பந்ததாரர்களுக்கு அனுசரணையாக கைமாறு செய்யும் விதத்திலும் செயல்பட்டு வருவதால்

ஒப்பந்ததாரர்கள் அவசர கோலத்தில் தரமற்ற பணிகள் செய்து முடித்துள்ளார்கள். பல சாலைகள் ஒர்க் ஆர்டரில் உள்ள நீளம், அகலம் அளவுகளில் இல்லாமலும் ஒர்க் ஆர்டரில் குறிப்பிட்ட முறைகளில் மெட்டல் போடாமலும் பணிகள் நடைபெற்று உள்ளது.

பணிகள் நடைபெறும் பொழுது பல தினசரி நாளிதழ்களில் சாலைகள் தரமற்ற முறையில் போடப்படுவது சேர்க்கப்படவில்லை என்றும் பார்க்கலை போட்டு முடித்த பின்பு அதன் மீது ஸ்டர் டஸ்ட் முறையாக தூவப்படவில்லை என்றும் செய்திகள் வந்தன. ஆனால் கொடைக்கானல் நகராட்சி அதிகாரிகள் இது சம்பந்தமாக எந்தவித நடவடிக்கையும் Show-cause நோட்டீஸ் ஒப்பந்ததாரர்களுக்கு கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2019 – 20 மற்றும் 2020 – 21 ஆம் ஆண்டுகளில் கொடைக்கானல் நகராட்சியால் எத்தனை சாலைப்பணிகள் நகரில் எந்தெந்த சாலைகள் போடுவதற்கு எந்த தேதியில் எந்த தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு, ஒப்பந்தங்கள் கூறப்பட்டன என்ற முழு விபரத்தையும், முறையாக ஏலத்தில் கலந்து கொண்டு ஒப்பந்தம் எடுத்த விபரத்தையும் தருமாறு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நான் கேட்டிருந்தேன்.

31.12.2021 ஆம் தேதியன்று R.T.I மூலமாக கொடைக்கானல் பொது தகவல் அலுவலருக்கு கேள்விகள் கேட்கப்பட்டிருந்தது. ஆனால் அதற்கு எந்தவிதமான பதிலும் கொடைக்கானல் பொது தகவல் அலுவலரிடம் இருந்து வழங்கப்படவில்லை. எனவே நான் மேலும் R.T.I –ன் விதிகளின்படி (Sec 19) பொது தகவல் அலுவலர் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் முதல் (1st appeal) மேல்முறையீடு 30.03.2022 ஆம் தேதியன்று செய்துள்ளேன்.

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் 07.04.2022 தேதியிட்ட கடிதத்தில் 16.05.2022 ஆம் தேதி வரை கொடைக்கானல் நகராட்சியில் இருந்து எந்தவிதமான முறையான தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் பதில் வழங்கப்படவில்லை.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நான் கேட்டுள்ள கேள்விகளுக்கு முறையாக பதில் அளிக்கப்பட்டுவிட்டால் கொடைக்கானல் நகராட்சியில் கடந்த இரண்டு வருடங்களாக விடப்பட்ட ஒப்பந்தங்களும் அவற்றை பெற்ற ஒப்பந்தகாரர்கள் பற்றிய முழு விபரம் மற்றும் எத்தனை கோடி ரூபாய்க்கு சாலை பணிகள் அமைக்கப்பட்டது என்ற விபரம் முழுமையாக தெரிய வந்துவிடும். அவ்வாறு தெரிய வந்துவிட்டால் நகராட்சியில் உள்ள உயர் அதிகாரிகளின் ஊழல் வெளிச்சத்திற்கு வந்துவிடும். மேலும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டத்தில் பல கோடி ரூபாய் பணம் கைமாறியது வெளிச்சத்திற்கு வந்துவிடும் என்பதால் இவர்கள் இன்றைய தேதிவரை முதல் முறையீட்டில் எனக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பதில் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சாலைப் பணிகள் செய்த ஒப்பந்ததாரர்கள் முறையாக பணிகள் செய்துள்ளார்களா என்பதை முறையாக வல்லுநர் குழு கொண்டு விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும். பல சாலைகள், ஏற்கனவே இருந்த பழைய சாலைகளை முறையாக தோண்டி எடுத்து விட்டு புதிய மெட்டல் புதிய கிராவல் கொண்டு சாலை அமைக்கப்படாமல் உள்ளது. பழைய சாலையில் எடுத்த கழிவுகளை மீண்டும் அதே சாலையில் கொட்டி அதன் மீது தடவி போடப்பட்டுள்ளது. அதனால் பல புதிய சாலைகள் மேடும் பள்ளமுமாக இருசக்கர மற்றும்

நான்கு சக்கர வாகனங்கள் செல்லும் பொழுது இடையூறாக உள்ளது. புதிதாக போடப்பட்ட சிமெண்ட் சாலைகள் பல இடங்களில் வெடித்துவிடும் நிலையில் உள்ளது.

எனவே, Directorate of Municipal Administration, சம்பந்தப்பட்ட துறை உயர் அதிகாரிகள், கொடைக்கானல் நகராட்சியில் நடைபெற்ற தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்ட இடங்களை வல்லுநர் குழு கொண்டு முறையாக ஆய்வு செய்து போடப்பட்ட சாலைகளில் உள்ள முறைகேடுகளை முறையாக ஆராய்ந்து ஆய்வு செய்து முறைகேடுகளுக்கு துணை போன கொடைக்கானல் நகராட்சியின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேலும் 2019 – 2020 மற்றும் 2020 – 2021 ஆம் வருடங்களில் கொடைக்கானல் நகராட்சியில் நடைபெற்ற தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலை ஒப்பந்த பணிகளில் நடைபெற்ற கோடிக்கணக்கான ஊழல்களை முறையாக விசாரணை நடத்தியும் குறிப்பிட்ட சில ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே எந்த முறையில் பணிகள் வழங்கப்பட்டன என்பதையும் விசாரித்து, இந்த ஊழலில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது Directorate of Vigilance and Anti Corruption துறையின் உயர் அதிகாரிகள் இது சம்பந்தமாக அனைத்து கோப்புகளையும் ஆராய்ந்து முறைகேட்டில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது வழக்குப் பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுத்து நீதியின் முன் நிறுத்துமாறு தாழ்மையுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.02.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கொடைகானல் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர் தனது 24.03.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

1 (I) <u>2019–20 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள சாலை பணிகளின் விவரம்.</u>

கொடைக்கானல் நகராட்சியில் 2019–20 ஆம் ஆண்டுகளில் அரசின் திட்டப்பணிகளில் எந்த சாலை பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், நகராட்சியின் பொது நிதியின் கீழ் 2019–20 ஆம் நிதியாண்டில் 4 சாலைகளை ரூ 32.50 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணி உரிய ஒப்பந்த விதிகளின்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<u>1 (2) 2020–21 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள சாலை பணிகளின் விவரம்.</u>

2020–21 ஆம் நிதியாண்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் எந்த சாலை அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், அரசின் இரண்டு திட்டங்களின் மூலம் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று முடிக்கப்பட்டுள்ளது.

அ) சிறப்பு சாலைகள் திட்டம் 2020 – 21
மதிப்பீடு ரூ 10.00 கோடி

ஆ) ஒருங்கிணைந்த நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு நிதி 2020–21
மதிப்பீடு ரூ 9.61 கோடி

2019–20 ஆம் நிதியாண்டில் ரூ 0.33 கோடி மதிப்பீட்டிலும், 2020–21 நிதியாண்டில் ரூ 19.61 கோடி மதிப்பீட்டிலும் சாலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டு நிதியாண்டிலும் மொத்தம் ரூ 19.94 கோடி மதிப்பீட்டில் மட்டுமே பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்க்கண்ட சாலைப் பணிகளின் ஒப்பந்தங்கள் அனைத்தும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த விதி 2000–ன்படியும், அரசாணை எண். 207 நிதி (ஊதியம்) துறை நாள்.26.07.2018–ன்படியும், முறையாக ஒப்பந்த அறிவிப்புகள் வெளியிடப்பட்டும் உரிய ஒப்பந்தப்புள்ளி வழிமுறைகளை பின்பற்றியுமே இரண்டு திட்டப் பணிகளும், பொது நிதி பணியிலும் சாலைப்பணி ஒப்பந்தங்களும் வழங்கப்பட்டுள்ளது.

கொடைக்கானல் நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளிகள் இணைய வழி மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் சிப்பம் பணிகள் (package) என்பதினால் முதல் நிலை ஒப்பந்ததாரர்கள் மட்டுமே பங்கேற்க கூடிய பணிகளாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி கொடைக்கானல் நகராட்சி சாலைப்பணிகள் உரிய ஒப்பந்த விதிகளின்படி, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

2019–20 மற்றும் 2020–21 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள சாலைப் பணிகளின் விரிவான விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

<u>சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21</u>

கொடைக்கானல் நகராட்சியில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21–ன் கீழ் ரூ 10.00 கோடி மதிப்பீட்டில், 5 சிப்பம் பணிகள் (7.04 கி.மீட்டர் 11 பணிகள்) சாலைகள் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.20557/2020/இ3, நாள் 16.12.2020–ன் மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | வார்டு எண் | பணியின் பெயர் | சாலையின் தன்மை | நீளம் (கி.மீ)–ல் | அகலம் (மீ)–ல் | திட்ட மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| சிப்பம் – I | | | | | | |
| 1. | 2.4.5 | நாயுடுபுரம் எ.பி.டி பார்சல் சர்வீஸ் முதல் சிவனடி சாலை சந்திப்பு, எம்.எம்.தெரு முதல் கே.பி.எஸ்.பள்ளி, ஆண்டவர் பாதம் முதல் லீ–போஸ் ஹோட்டல் மற்றும் செட்டியார் பார்க் பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி | தார் சாலை | 2.34 | 6 மீ | 200.00 இலட்சம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சிப்பம் – II | | | | | | |
| 2. | 24 | செண்பகனூர் புதிய உரக்கிடங்கிற்கு தார்ச்சாலை அமைக்கும் பணி | தார் சாலை | 3.05 | 4.50 மீ | 200.00 இலட்சம் |
| சிப்பம் – III | | | | | | |
| 3. | 18 | அப்பர் லேக் சாலை மற்றும் விஜி.பி பகுதி தார் சாலை அமைக்கும் பணி | தார் சாலை | 2.00 | 7.50 மீ | 200.00 இலட்சம் |
| சிப்பம் – IV | | | | | | |
| 4. | 16.19 | பழைய அப்பர் லேக் சாலை மற்றும் புதுக்காடு பகுதிகளில் சிமிண்ட் சாலை அமைக்கும் பணி | சிமிண்ட் சாலை | 1.40 | 5.65 மீ | 200.00 இலட்சம் |
| சிப்பம் – V | | | | | | |
| 5. | 3 | ரைபிள் ரேஞ் சாலை மற்றும் பழைய கான்வெண்ட் சாலை சிமிண்ட் சாலை அமைக்கும் பணி | சிமிண்ட் சாலை | 1.30 | 6.00 மீ | 200.00 இலட்சம் |
| | | | | 7.04 கி.மீ | | 1000.00 இலட்சம் |

அதன்படி, மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டிருந்த மதிப்பீடுகளுக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.23659/2020–38/DO2, நாள் 22.12.2020–ன் மூலம் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு Tender Transparency Act – விதிகளின்படி, 12.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருந்தது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை அரசாணை எண்.207, நிதி (ஊதியம்) துறை, நாள் 26.07.2018–ன்படி மாநில அளவில், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1275/2020/இ1 நாள் 21.12.2020–ன் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு, மாநில அளவில் தமிழ் நாளிதழ் "தினபூமி" மற்றும் ஆங்கில நாளிதழ் "Financial Express"ல் 24.12.2020ல் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், ஒப்பந்தப்புள்ளிகள் இணைய வழியில் www.tntenders.gov.in என்ற தமிழ்நாடு அரசு இணைய தளத்திலும் 31.12.2020 ஆம் தேதிய மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் பக்கம் 58 வரிசை எண்.80–ல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி 12.01.2021 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க நகர்மன்றத் தீர்மானம் எண்.963, நாள் 22.01.2021–ல் மன்றம் ஒப்புதல் வழங்கியதன் அடிப்படையில், குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்திருந்த ஒப்பந்ததாரர்களுக்கு 16.02.2021–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்கண்ட பணிகள் அனைத்தும் அண்ணா பல்கலைக் கழக பொறியியல் கல்லூரி, திண்டுக்கல் மூன்றாம் தரப்பு ஆய்வு செய்யப்பட்டு கட்டுமானப் பொருட்கள் அனைத்தும் தரப்

பரிசோதனை சான்று பெறப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பணிகள் முடிக்கப்பட்ட அளவிற்கே ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும் டுபிட்கோ நிறுவனத்தின் மூலம் மாநில தரக்கட்டுப்பாட்டு வல்லுநர்கள் குழு (State Quality Monitoring Committee) 10.07.2022–ல் மேற்கண்ட சாலைகளை ஆய்வு செய்து தரமானதாக உள்ளதாக டுபிட்கோ நிறுவனத்திற்கு அறிக்கை சமர்ப்பித்த பிறகே இத்திட்டத்திற்கான நிதி, டுபிட்கோ நிறுவனத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒப்பந்ததாரர்களால் பணிகளில் குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை முடித்திடவும், பணியில் குறைபாடுகளை நிவர்த்தி செய்திடவும் அறிவிப்புகள் வழங்கப்பட்டு பணிகள் தரமானதாகவும், உரிய அளவுகளின்படியும் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

மேலும் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் அளவுகள், அளவு புத்தகம் எண்.2/2020–21, 3/2020–21, 38/2020–21, 60/2020–21 மற்றும் 74/2020–21–ல் பதியப்பட்டு மண்டல செயற்பொறியாளர், மதுரை அவர்களால் Test check செய்யப்பட்டு பட்டியல் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

II. <u>ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2020–2021 (IUDM 2020–2021)</u>

கொடைக்கானல் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2020–21–ன்கீழ் ரூ 9.61 கோடி மதிப்பீட்டில் 3 சிப்பப் பணிகள் (8.75 கி.மீட்டர், 11 பணிகள்) சாலைகள் அமைப்பதற்கு அரசாணை நிலை எண்.303, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.09.09.2020–ன் மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| சிப்பம் – I (தார்ச்சாலை) | | |
| 1 | காமராஜர் சாலையில் தார்ச்சாலை அமைத்தல் | 109.00 |
| 2 | மூஞ்சிக்கல் முதல் யுனிவர்சிட்டி சந்திப்பு வரை தார் தளம் அமைத்தல் | 148.00 |
| 3 | நாயுடுபுரம் விநாயகர் கோயில் முதல் நகராட்சி எல்லை வரை தார் தளம் அமைத்தல் | 197.00 |
| 4 | லாயிட்ஸ் சாலை முதல் பியர்சோலா (கல்லுக்குழி) வரை தார் தளம் அமைத்தல். | 196.00 |
| சிப்பம் – I I (தார்ச்சாலை) | | |
| 1 | சீனிவாசபுரம் பகுதியில் தார்ச்சாலை அமைத்தல் | 61.00 |
| 2 | கவி தியாகராஜர் சாலையில் தார்ச்சாலை அமைத்தல் | 38.00 |
| 3 | பெண்டர்லாக் சாலையில் தார்ச்சாலை அமைத்தல் | 49.00 |
| 4 | கால்டன் சாலையில் தார்ச்சாலை அமைத்தல் | 49.00 |
| சிப்பம் – I I I (தார்ச்சாலை) | | |
| 1 | அண்ணாநகர் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 25.50 |
| 2 | பெய்ரி பால்ஸ் சாலையில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 52.00 |
| 3 | பிளிஸ்வில்லா 2வது தெரு பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 36.50 |
| | | |
| | மொத்தம் | 961.00 |

அதன்படி, மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டிருந்த மதிப்பீடுகளுக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.23659/2020–38/DO2, நாள் 22.12.2020–ன் மூலம் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு Tender Transparency Act –விதிகளின்படி, 12.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருந்தது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை அரசாணை எண்.207, நிதி (ஊதியம்) துறை, நாள் 26.07.2018–ன்படி மாநில அளவில், ஒரு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் வெளியிடும் பொருட்டு, இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களுக்கு கொடைக்கானல் அலுவலக கடிதம் ந.க.எண்.795/2020/இ1 நாள் 21.09.2020–ன் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு , மாநில அளவில் தமிழ் நாளிதழ் "தினசெய்தி" மற்றும் ஆங்கில நாளிதழ் "New Indian Express" –ல் 22.09.2020–ல் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், ஒப்பந்தப்புள்ளிகள் இணைய வழியில் www.tntenders.gov.in என்ற தமிழ்நாடு அரசு இணைய தளத்திலும் 24.09.2020 ஆம் தேதிய மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் பக்கம் 31 வரிசை எண்.45–ல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி 12.10.2021 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க நகர்மன்றத் தீர்மானம் எண்.913, நாள் 29.10.2020–ல் மன்றம் ஒப்புதல் வழங்கியதன் அடிப்படையில், குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்திருந்த ஒப்பந்ததாரர்களுக்கு 09.11.2020–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்கண்ட பணிகள் அனைத்தும் அண்ணா பல்கலைக் கழக பொறியியல் கல்லூரி, திண்டுக்கல் மூன்றாம் தரப்பு ஆய்வு செய்யப்பட்டு, கட்டுமானப் பொருட்கள் அனைத்தும் தரப் பரிசோதனை சான்று பெறப்பட்டு உள்ளது.

மேலும், மேற்கொள்ளப்பட்ட பணிகளின் அளவுகள் அளவு புத்தகம் எண். 47/2020–21, 48/2020–21, 49/2020–21, 50/2020–21, 56/2020–21–ல் பதியப்பட்டு மண்டல செயற்பொறியாளர், மதுரை அவர்களால் Test check செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகள் அனைத்தும் திண்டுக்கல் அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரியால் மூன்றாம் தரப்பு ஆய்வு செய்யப்பட்டு, கட்டுமானப் பொருட்கள் அனைத்தும் தரப் பரிசோதனை சான்று பெறப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பணிகள் முடிக்கப்பட்ட அளவிற்கே ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒப்பந்ததாரர்களால் பணிகளில் குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை முடித்திடவும், பணியில் குறைபாடுகளை நிவர்த்தி செய்திடவும் உரிய அறிவிப்புகள் வழங்கப்பட்டு பணிகள் தரமானதாகவும், உரிய அளவுகளின்படியும் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

III. <u>நகராட்சி பொது நிதி 2019–20</u>

கொடைக்கானல் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டம் 2013–14–ல் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வந்த காரணத்தினாலும், 66.50 கி.மீட்டர் குடிநீர் பகிர்மான குழாய்கள் சாலைகளில் பதிக்கப்பட்டுவந்த காரணத்தினாலும், 2013–14 ஆம்

நிதியாண்டு முதல் 2019–20 ஆம் நிதியாண்டு வரை அரசிடமிருந்து எந்த திட்டப்பணிகளும் சாலைப்பணிகளுக்காக மேற்கொள்ளப்படவில்லை. ஆதலால் பல்வேறு சாலைகள் தற்காலிகமாக சீரமைக்க வேண்டியிருந்ததாலும், நகராட்சி பொது நிதி 2019–20–ன் மூலம் கீழ்க்கண்ட நான்கு பணிகள் மட்டும் நகர்மன்ற தீர்மானம் எண்.639 நாள் 31.07.2019–ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

1. ரைபிள் ரேஞ்ச் சாலையினை சீரமைத்தல் – ரூ.9.50 இலட்சம்
2. ஆனந்தகிரி 5–வது மற்றும் 6வது சாலையினை சீரமைத்தல் – ரூ.8.00 இலட்சம்
3. பிளிஸ்வில்லா சாலையினை சீரமைத்தல் – ரூ 10.00 இலட்சம்
4. கவி தியாகராசர் சாலையினை சீரமைத்தல் – ரூ 5.00 இலட்சம்

இப்பணிகளை மேற்கொள்வதற்கு நகராட்சி பொறியாளர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு 18.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும், இணையதள வழியிலும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி இணையதள வழியில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

அரசாணை நிலை எண்.243 நிதி (ஊதியம்) துறை நாள் 21,08.2017–ன்படி பொது நிதியில் கீழ் பணிகள் மேற்கொள்ள ரூ 25.00 இலட்சத்திற்கு குறைவாக இருப்பின் நாளிதழில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்ய வேண்டியதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, நகராட்சியின் அறிவிப்புப் பலகை மற்றும் இணையதள வழியிலும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது.

குறைந்த மதிப்பிலான ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத் தீர்மானம் எண்.682 நாள் 22.10.2019–ன்படி ஏற்றுக் கொள்ளப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகள் நகராட்சி இளநிலை பொறியாளர் மற்றும் நகராட்சி பொறியாளரால் கண்காணிக்கப்பட்டு தரமாக இருப்பதை உறுதி செய்து அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றி பணிகள் செய்து முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

புதியதாக அமைக்கப்பட்டுள்ள தார் சாலைகளின் இருபுறங்களிலும் வெள்ளை நிற ஒளிர்பட்டைகள் மற்றும் ஒளிரும் கற்கள் பதிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

திட்டப் பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்யும் போது சாலையின் அகலம் சராசரியாக அளவிடப்பட்டு அதன்படியே மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. கொடைக்கானல் நகராட்சி சாலைகளில் ஒரே சாலை மேடுபள்ளங்களாகவும், பல்வேறு இடங்களில் குறுகலாகவும், அகலமாகவும் வேறுபாடுகளுடன் அமைந்துள்ளதால், இடத்தின் தன்மைக்கு ஏற்ப ஒவ்வொரு இடத்திலும் அகலம் மாறுபடும். அதன்படியே பணி மேற்கொள்ளும் போது சாலைகள் அமைக்கப்பட்டு அளவீடுகள் அளவு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு, கணக்கிடப்பட்டு கண்காணிப்பு அலுவலர்களால் அளவீடுகள் ஒப்புதல் செய்யப்பட்டு, தரத்தினை உறுதி செய்த

பின்னரே ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. பணி மேற்கொள்ளப்பட்ட அளவுகளின் படியே, அளவீடுகள் அளவு புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.

தார்ச்சாலை அமைப்பதற்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள ஜல்லி மற்றும் தார்க்கலவைகள் உரிய விகிதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை கொடைக்கானல் நகராட்சி பணி ஆய்வாளர், இளநிலை பொறியாளர் மற்றும் நகராட்சி பொறியாளரால் பணி நடைபெறுவதினை கண்காணித்தும், சாலையின் தரத்தினை உறுதி செய்தும் உள்ளனர். மேலும், மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகத்தின் மண்டல செயற்பொறியாளர் அவர்களால் மேலாய்வு செய்யப்பட்டு, சாலையின் தரத்தினை உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 'டுபிட்கோ' நிறுவன மாநில தரக்கட்டுப்பாட்டு நிபுணர் குழுவினரால் இச்சாலைகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, சாலையின் தரத்தினை உறுதி செய்த பின்னரே நிதி நிறுவனத்திடமிருந்து நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் கோரியிருந்த தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்டிருந்த தகவல்கள் அனைத்தும் அக்காலகட்டத்தில் சாலைப் பணிகள் நடைபெற்று நிறைவடையாமல் இருந்த காரணத்தினால் அக்கோப்புகள் அனைத்தும் நடப்புக் கோப்பாக (Current file) இருந்ததால் மனுதாரர் கோரியிருந்து தகவல்களுக்கு முழுமையாக தகவல்கள் வழங்க இயலாத நிலை இருந்தது என்ற விபரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் மறுக்கப்பட்டதாக தெரிவித்து, மாவட்ட ஆட்சியர் திண்டுக்கல் அலுவலகத்திற்கு முதல் மேல்முறையீடு செய்ததாக புகார் கடிதத்தில் தெரிவித்துள்ளார். ஆனால், கொடைக்கானல் நகராட்சி அலுவலகத்திற்கான மேல்முறையீட்டு அலுவலர், "நகராட்சி ஆணையாளரே" ஆவார். மனுதாரரர் வழக்கறிஞர் என்ற நிலையில், இதனை அறிந்திருந்தும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு முதல் மேல்முறையீடு செய்ததாக தெரிவித்துள்ளார். எனவே, இதனை மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் பெறுவதை நோக்கமாக கொண்டிருக்கவில்லை என்றும் மனுக்களை தொடர்பற்ற அலுவலகத்திற்கு அனுப்பி காலம் கடத்தி அதன்மேல் புகார் தெரிவிக்க வேண்டும் என்ற நோக்கம் உள்ளதாகவே கருதவேண்டியுள்ளது. எனவே தகவல்கள் வழங்காமல் உள்நோக்கம் கொண்டு கொடைக்கானல் நகராட்சி அலுவலகத்தில் யாதொரு தகவலும் மறைக்கப்படவில்லை என்ற விபரம் பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

2019–20 மற்றும் 2020–21 ஆம் நிதியாண்டுகளில் நடைபெற்ற பொது நிதி மற்றும் திட்ட பணிகள் அனைத்தும் முறையாக மண்டல செயற்பொறியாளர், டுபிட்கோ நிறுவன மாநில தரக்கட்டுப்பாட்டு வல்லுநர் குழு ஆகியோர்களால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், சாலை கட்டுமானப் பொருட்களின் தரப்பரிசோதனை அண்ணா பொறியியல் கல்லூரியால் பரிசோதனை செய்யப்பட்டு சான்று வழங்கப்பட்டுள்ளது.

மேற்கொள்ளப்பட்ட சாலைப் பணிகள் அனைத்தும் 10 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட சாலைகளாகும். தற்போது இச்சாலைகள் அமைக்கும் போது மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்ட Picking மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. ஏற்கனவே இருந்த சாலையின் உறுதி தன்மையினை குலைக்காத வகையில் Wetmix macadam 15cm அளவிற்கு பரப்பி சமதளப்படுத்தி, அதன்பின்பு Dense Bitumen Macadam 50mm அமைத்து பின்பு Bitumen concrete 30mm க்கு சாலை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் சிமிண்ட் சாலைகள் அமைக்கும்போது ஏற்கனவே இருந்த பழைய சாலைகளில் இருந்த கான்கிரிட் அப்புறப்படுத்தப்பட்டு PCC 1:4:8 ஆனது 10cm thick அமைக்கப்பட்டு

அதன்பின்பு PCC 1:1.5:3 ஆனது 15 cm thick போடப்பட்டு முறையாக Curing செய்யப்பட்ட பின்னரே பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது.

மேற்கண்ட தார்ச்சாலை மற்றும் சிமிண்ட் சாலையின் தரம் குறித்து டுபிட்கோ நிறுவனத்தின் மாநில தரக்கட்டுப்பாட்டு வல்லுநர் குழுவால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் மேற்கண்ட சாலைப் பணிகள் எவ்வித குறைபாடுகளுமின்றி தரமானதாகவும் உரிய அளவீடுகளோடும் நல்ல நிலையில் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரரின் தற்போதைய புகார் கடிதத்திலும், குற்றச்சாட்டிலும் உள்நோக்கம் உள்ளதாக கருதவேண்டியுள்ளது. இப்புகார் கடிதத்தில், ஆதாரங்களின்றி யூகங்களின் அடிப்படையில், உள்நோக்கத்தோடு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்புகாரில் உண்மை தன்மை இல்லை என்பதினை கருத்தில் கொண்டு, இம்மனுவினை தள்ளுபடி செய்து உத்திரவிடுமாறு மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தினை மிகவும் பணிவுடன் வேண்டி கேட்டுக் கொள்கிறேன் " என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் கொடைகானல் நகராட்சி ஆணையரும் 02.05.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.04.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. P. ஆறுமுகவேலன் 02.05.2023 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகாமல், உயர்நீதி மன்றப் பணி காரணமாக ஆஜராக இயலவில்லை என தெரிவித்து மற்றொரு வாய்ப்பினை தருமாறும் கோரியிருந்தார்.

(5) எதிர்மனுதாரரான கொடைக்கானல் நகராட்சி ஆணையாளராகப் பணிபுரிந்து, தற்போது திருச்சிராப்பள்ளி மாநகராட்சி துணை ஆணையராக பணியாற்றும் திரு.த.நாராயணன் மற்றும் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையராகப் (பொறுப்பு) பணிபுரியும் திரு.V.முத்துகுமார் ஆகியோரும் 02.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

"திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் நகராட்சியில் 2019–20 ஆம் நிதியாண்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.33 இலட்சம் மதிப்பீட்டிலும் 2020–21 ஆம் ஆண்டில் சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் ரூ.10 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.9.61 கோடி மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 19.94 கோடி மதிப்பீட்டில் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடுகளை தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் இரண்டு நாளிதழ்கள், இணையதளம் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மூலம் வெளியிடப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை கோரிய ஒப்பந்ததாரர்களுக்கு சிப்பப்பணிகள்(Packages) மேற்கொள்ளப்பட்டன.

கொடைக்கானல் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப் பணிகள் அனைத்தும் திண்டுக்கல், அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியால் தரச் சான்று பெறப்பட்டு, மாநில தரக்கட்டுப்பாட்டு வல்லுனர் குழு மூலம் ஆய்வு செய்யப்பட்ட பின்னரே மேற்காணும் சாலைப்பணிகளுக்கான நிதி 'டுபிட்கோ' TUFIDCO நிறுவனத்தால் விடுவிக்கப்பட்டது. இந்நேர்வு தொடர்பாக உள்ளாட்சி நிதித் தணிக்கையும் மேற்கொள்ளப்பட்டு, உள்ளாட்சி நிதித் தணிக்கையால் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்பதை தெரிவித்து, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி கோரியதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்பதையும் மேலும் மனுதாரர் கோரியவாறு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட விவரங்கள், சாலைப் பணிகள் நடைபெற்ற நோக்கில் மனுதாரரால் கோரப்பட்டதால், மனுதாரர் கோரியிருந்த

தகவல்களை நகராட்சியால் அளிக்க இயலவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், இம்முறைமன்றத்தில் கொடைக்கானல் நகராட்சி ஆணையரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 24.03.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

(6) மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று அவருக்கு மற்றொரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, 22.05.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.05.2023 தேதியிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. அதன்படி மனுதாரர் திரு. P. ஆறுமுகவேலன், 22.05.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"கொடைக்கானல் நகராட்சி பகுதிகளில் 2019–2020 மற்றும் 2020–2021 ஆம் ஆண்டுகளில் தார் சாலைகள்/சிமெண்ட் சாலைகள் அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரும்போது அவை ஒப்பந்த விதிகளின்படி செய்தித்தாள்களில் வெளியிடப்படவில்லை. குறிப்பிட்ட 4 அல்லது 5 ஒப்பந்ததாரர்களைக்கொண்டு அதாவது திரு. தண்டபாணி, திரு. பிலால் போன்ற குறிப்பிட்ட ஒப்பந்ததாரர்கள் மூலம் மேற்கண்ட பணிகள் நடைபெற்றது. மேற்கண்ட தார்சாலை அமைக்கும் பணி தரமற்றதாக உள்ளது. நடைபெற்ற சாலைப்பணிகள் குறித்த தரத்தை அண்ணா பல்கலைக் கழகம் மூலம் ஆய்வு செய்யாமல் தனியார் பொறியியல் கல்லூரி மூலமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. தரமற்ற முறையில் அமைக்கப்பட்ட சாலைகளினால் நகராட்சிக்கு பெரும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி மூலம் கொடைக்கானல் நகராட்சியில் தார்சாலைகள் அமைத்ததற்கான விவரங்களை தகவல் பெறும் சட்டத்தின்கீழ் கோரியும் நகராட்சியால் தகவல்கள் அளிக்கப்படவில்லை. எனவே, ஒப்பந்தம் குறித்து நாளிதழ்களில் வெளியிடாமலும், தரமற்ற சாலைகளை அமைத்தது குறித்தும் உயர் அலுவலர்களால் ஆய்வு செய்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 4.2.2023 அன்று இம்முறை மன்றத்திற்கு அளித்திருந்த எனது மனுவில் உள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், கொடைக்கானல் நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, முன்னாள் ஆணையர், நகராட்சிப் பொறியாளர் மற்றும் ஆணையர் (பொறுப்பு) ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலைச் சேர்ந்த மனுதாரர் திரு. P. ஆறுமுகவேலன் என்பவர் தனது 04.02.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் கொடைக்கானல் நகராட்சி பகுதிகளில் 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டுகளில் தார்சாலைகள் / சிமெண்ட் சாலைகள் அமைப்பதற்கு நாளிதழ்களில் எவ்வித ஒப்பந்தப்புள்ளி விளம்பரமும் செய்யப்படாமல், தரமற்ற பொருட்கள் மூலம் சாலைகள் அமைக்கப்பட்டதில் ரூ 50 கோடி மதிப்பிலான ஒப்பந்தங்கள் குறிப்பிட்ட ஒப்பந்ததாரர்களுக்கு மட்டும் முறைகேடாக வழங்கப்பட்டு, தரமற்ற சாலைகள் அமைக்கப்பட்டன என புகாராக தெரிவித்துள்ளார்.

கொடைக்கானல் நகராட்சிக்குட்பட்ட (i) ரைபிள் ரேஞ்ச் சாலை (ii) ஆனந்தகிரி 5–வது மற்றும் 6வது சாலை (iii) பிளிஸ்வில்லா சாலை மற்றும் (iv) கவி தியாகராசர் சாலை ஆகிய 4 சாலைகள் மிகவும் பழுதடைந்ததன் காரணமாக, நகராட்சியின் 2019–20 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் முறையே ரூ 9.50 இலட்சம், ரூ 8.00 இலட்சம், ரூ 10.00 இலட்சம் மற்றும் ரூ 5.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணிகளுக்கு கொடைக்கானல் நகராட்சி, நகர்மன்ற தீர்மான எண்.639 நாள் 31.07.2019–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 18.09.2019 அன்று இணையவழி மூலமும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்ற தீர்மானம் எண்.682 நாள் 22.10.2019–ன்படி ஏற்று கொள்ளப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது நகராட்சி ஆணையரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நாளிதழ்களில் வெளியிடுவது தொடர்பாக திருத்திய ஆணை வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.243, நிதி (சம்பளங்கள்) துறை நாள் 21.08.2017–ல் ரூ 25/– இலட்சத்திற்கு குறைவான மதிப்பிலான கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நாளிதழ்களில் வெளியிட தேவையில்லை என்கிற ஆணையின்படி, நகராட்சி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நாளிதழில் வெளியிடாமல், இணையவழி மூலம் வெளியிடப்பட்டுள்ளது ஆணையரின் அறிக்கை வாயிலாக தெரிய வருகிறது.

<u>2020–21 ஆம் ஆண்டு சிறப்புச் சாலைகள் திட்டம்:–</u>

கொடைக்கானல் நகராட்சியில் கீழ்க்குண்டாறு குடிநீர் திட்டத்தின்கீழ் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பொருட்டு, 2020–21 ஆம் ஆண்டு சிறப்பு சாலைகள் திட்டத்தின்கீழ் (Special Road Programme 2020–21) கொடைக்கானல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தார் சாலைகள் / சிமெண்ட் சாலைகள் ரூ 10/– கோடி மதிப்பீட்டில் அமைக்க 5 சிப்பம் பணிகள் (7.04கி.மீட்டரில் 11 பணிகள்) மேற்கொள்வதற்கு அரசாணை (நிலை) எண்.125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 13.11.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறை ஆணை எண்.20557/2020/இ3, நாள் 16.12.2020–ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் தலைமைப் பொறியாளரும் 22.12.2020 அன்று தொழில்நுட்ப அனுமதி வழங்கியுள்ளார்.

மேற்காணும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 24.12.2020 நாளிட்ட 1 தமிழ் மற்றும் 1 ஆங்கில நாளிதழ்களிலும் தமிழ்நாடு அரசின் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் மற்றும் இணையதளம் மூலமும் வெளியிடப்பட்டு, வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் 22.01.2021 அன்று நகர்மன்றத்தில் தீர்மானம் (தீர்மான எண்.963) நிறைவேற்றப்பட்டு ஒப்பந்ததாரர்களுக்கு 16.02.2021 அன்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது. ஒப்பந்ததாரர்கள் மூலம் மேற்கண்ட பணிகள் சென்னை அண்ணா பல்கலைக்கழக அங்கமான திண்டுக்கல், University College of Engineering மூலம் மூன்றாம் தரப்பு ஆய்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் (TUFIDCO – Tamil Nadu Urban Finance and Infrsatructure Development Corporation Ltd.) மூலம் மாநில தரக்கட்டுப்பாட்டு வல்லுநர்கள் குழு (State Quality Monitoring Committee) வாயிலாக 10.07.2022 அன்று மேற்கண்ட சாலைகளை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தப் பின்னரே இத்திட்டத்திற்கான நிதி TUFIDCO நிறுவனத்தினால்

விடுவிக்கப்பட்டு, முறையாக ஒப்பந்ததாரர்கள் பணிகள் முடிக்கப்பட்டதை அளவு புத்தகத்தின் (M Book) பதிவு செய்து, மண்டல செயற்பொறியாளரால் உறுதி செய்யப்பட்ட பின்னரே ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

**2020–21 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (IUDM 2020–21):–**

கொடைக்கானல் நகராட்சியில் கீழ்க்குண்டாறு குடிநீர் திட்டத்தின்கீழ் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பொருட்டு, 2020–21 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்திட (IUDM – Integrated Urban Development Mission) அரசாணை நிலை எண். 303, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 09.09.2020–ல் ஆணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, கொடைக்கானல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தார்சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகளை ரூ 9.61 கோடி மதிப்பீட்டில் 3 சிப்ப பணிகளை (8.75 கி மீட்டர் 11 பணிகள்) மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 1 தமிழ் மற்றும் 1 ஆங்கில நாளிதழ்களில் 22.09.2020 அன்று வெளியிடப்பட்டும், 24.09.2020 நாளிட்ட மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் வெளியிட்டும் மற்றும் இணையதளம் மூலமாகவும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை வெளியிட்டுள்ளது ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

மேலும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் 29.10.2020 அன்று நகர்மன்றத்தால் ஒப்புதல் (தீர்மான எண்.913) அளிக்கப்பட்டு, 09.11.2020 அன்று ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளதையும் ஆவணங்களின் மூலம் அறிய வருகிறது.

ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்பட்ட பணிகளை திண்டுக்கல் அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி மூலம் மூன்றாம் தரப்பு ஆய்வு செய்யப்பட்டு, தரச்சான்றின் அடிப்படையிலும் மற்றும் செய்து முடிக்கப்பட்டுள்ள பணிகளை முறையாக ஆய்வு செய்து அளவு புத்தகத்தில் (M Book) பதிவு செய்தும், மதுரை மண்டல செயற்பொறியாளர் தரஆய்வு செய்த பின்னரே முடிக்கப்பட்ட பணிகளுக்கு ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

மனுதாரர் சாலைப்பணிகள் குறித்தான தகவல் பெறும் உரிமை சட்டத்தின்கீழ் தகவல்கள் கோரியபோது, நடப்புக் கோப்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் இருந்ததினால் தகவல் அளிக்க இயலாது என்கிற தகவலை தகவல் பெறும் உரிமை சட்டத்தின்கீழ் மனுதாரர் திரு. P. ஆறுமுகவேலன் என்பவருக்கு பொது தகவல் அலுவலர் நிலையிலுள்ள நகராட்சி மேலாளர் தகவல் தெரிவித்திருக்க வேண்டும். இதை தவிர்த்து, பதிலே அளிக்காமல் இருந்துள்ள கொடைக்கானல் நகராட்சி நிர்வாகத்தின் பொறுப்பற்ற செயலை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது. 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி மேல்முறையீட்டு அலுவலர் நிலையில் உள்ள கொடைக்கானல் நகராட்சி ஆணையாளரிடம் முறையிட்டு உரிய தகவலை பெற்றுக்கொள்ளுமாறு மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார்.

இனிவருங்காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாவண்ணம் உறுதிப்படுத்துமாறு கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேற்காணும் நிலையில், மனுதாரரின் புகாரினை நிரூபிக்க போதிய ஆதார ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததால் கொடைக்கானல் நகராட்சி ஆணையாளரின் அறிக்கையை ஏற்று இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக் வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 07–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. P. ஆறுமுகவேலன்,
3/131, லாயிட்ஸ் ரோடு,
கொடைக்கானல் – 624 101, திண்டுக்கல் மாவட்டம்.

2) ஆணையாளர், கொடைக்கானல் நகராட்சி,
கொடைக்கானல் – 624 101, திண்டுக்கல் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப்பதிவாளா